# தமிழ்நூல்கள் காட்டும் மனிதபிறவிப்பயன் -ஓர் ஆய்வு

**வெ. மோகனமாலா**
முனைவர் பட்ட ஆய்வாளர், பதிவு எண்:CRE/YHE 21PDEC1420/2022, விசன் ஸ்கை ரிசர்ச் சென்டர், ஆழியார், பாரதியார் பல்கலைகழகத்துடன் இணைக்கப்பட்டது, கோவை, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர். ச. விஜயலட்சுமி**
நெறியாளர், உலக சமுதாய சேவா சங்கம், விசன் ஸ்கை ரிசர்ச் சென்டர், ஆழியார், பாரதியார் பல்கலைகழகத்துடன் இணைக்கப்பட்டது, கோவை, தமிழ்நாடு. இந்தியா.

**ABSTRACT**

Every human being should know the aim of life; life categories and get the living innate perfection are essentials of human life. The main purpose of human life is self realization gaining divine consciousness. A person who had consciousness would appear divine love. A divine loving person does not care about the rewards and he makes others suffer removing and he makes himself happy by seeing the happiness of others. He will do well for himself and live happily with health wealth and contentment. This is known as utility of human birth. Various Tamil scriptures speak well of utility of human birth and the nature of true charity. Vethathiri Maharishi also insists that every man should live not only for himself but also dedicate his life for the good of society. Charity is the art of helping others without any expectations for material, fame or position as NISHKAMIYA KARMA. He who had made his life a lamp that illuminates the lives of others is a person who has achieved the benefit of birth. The purpose of this article is to find the human innate utility shown in Tamil texts and also the action an individual must take to achieve the inherent benefits.

**Keywords**: Human innate utility, self realization, Divine consciousness, Charity, Divine love.

## ஆய்வுச்சுருக்கம்

ஒவ்வொரு மனிதனும் தன் வாழ்வின் நோக்கத்தையும், வாழும் வகையையும் அறிந்து வாழ்ந்து பிறவிப்பயனை அடைய வேண்டும். தன்னை உணர்தல், இறையுணர்வு பெறுதல், முழுமைபேறு அடைதல் மனித வாழ்வின் நோக்கம் ஆகும். தெய்வத்தை அறிந்தவரிடமே `தெய்வீக அன்பு ' தோன்றும். அவர் தனக்கும், பிறர்க்கும் நல்லதையே செய்து உடல்நலத்தோடும் பொருள்வளத்தோடும் மனநிறைவோடும் வாழ்வர். தெய்வீக அன்புடையாரே பிரதிபலன் கருதாது பிறர் துன்பம் போக்கும் தொண்டாற்றி பிறர் மகிழ்வதை கண்டு தான் மகிழ்வர். இதுவே பிறவிப்பயன் ஆகும். பல்வேறு தமிழ் நூல்கள் பிறவிப்பயன் பற்றியும் உண்மையான தொண்டின் தன்மை பற்றியும் சிறப்பாக கூறுகின்றன. வேதாத்திரி மகரிஷியும் ஒவ்வொரு மனிதனும் தனக்காக மட்டும் வாழாமல் சமுதாய நன்மைக்காவும் தன் வாழ்வை அர்பணிக்க வேண்டும் என வலியுறுத்துகிறார். தொண்டு என்பது பிறர்க்குதவும் செயலை பொருளுக்காகவோ, புகழுக்காகவோ, பதவிக்காகவோ இல்லாமல் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி நிஷ்காமிய கர்மமாக செய்ய வேண்டும். பிறர் வாழ்வில் விளக்கேற்றும் சுடராய் தன் வாழ்வு அமைய பெற்றவரே பிறவிப்பயனை அடைவர். உலகிற்கு தொண்டு புரிவதே மனித உடலின் உயர்ந்த பயன்பாடு. தமிழ்நூல்கள் காட்டும் பிறவிப்பயனைப் பற்றியும் பிறவிப்பயனை அடைய

தனிமனிதன் செய்ய வேண்டிய செயல்களை பற்றியும் ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கலைச்சொற்கள்

பிறவிப்பயன், முழுமைபேறு, தெய்வீக அன்பு, தொண்டு, இறையுணர்வு, பயன்பாடு.

**முன்னுரை**

அரிது கேட்கின் வரிவடிவேலோய்
அரிதரிது மானிடராய் பிறத்தல் அரிது

- ஔவையார்

இயற்கை எனும் பேருண்மையின் தோற்றம்
இயல்பாய் அது ஓறறிவு முதல் ஆறறிவாய் மாற்றம்
இறுதியாய் மனிதகுலத்தின் பரிணாமம்
இன்பம் நிலைக்க சித்தர்கள் தந்த சிறப்பு நிலையே யோகம்

இருப்பு நிலையோடு இணைந்து இசைபட வாழ்தல் மனித குலத்தின் இன்றியமையாத தேவை.இவ்வுலக மக்களுக்கு தன் உடல், உயிர், மனத்தை இயன்ற அளவு அர்பணித்து தன் மனதின் அமைதியைத் தக்க வைத்து அன்பும் கருணையும் இயல்பாய் கொண்டு உலகமக்கள் அனைவரும் தன்னிறைவோடு வாழ தன்னை அர்பணிக்கும் தகைமை வேண்டும். மனிதகுலம் தோன்றி பல இலட்சம் ஆண்டுகள் ஆகிவிட்டன. ஆதியில் விலங்குகளோடு வாழ்ந்த மனிதன் தனது பிறவிப்பயனை அறிந்து உணரவில்லை.

ஐயப்படாது அகத்தது உணர்ந்தானை வானுறையுள்
தெய்வத்துள் வைக்கப்படும். - [குறள்-702]

என்ற குறளுக்கிணங்க இறைநிலையின் உண்மை இயல்புதனை சிறிதும் ஐயமின்றி முழுமையாய் உணர்ந்து பிறவிப்பயனை அடைந்தவர்கள் மகான்கள், ஞானிகள், சித்தர்கள் ஆவர்.

**ஈதல் இசைபடவாழ்தல்**

மனிதர்களை மகான்களாக ஆக்கியது அவர்களுடைய தவவாழ்வும்,அறவாழ்வும் தான். தவம் என்பது தன்னை உணர்தல், தனக்கு மூலமான தெய்வத்தை உணர்ந்தறிதல். அதற்கு உதவுவது குண்டலினியோகம் எனும் தவப்பயிற்சி. அந்த யோகத்தின் வழியில் இறைஉணர்வு பெற்றவர்கள் அறவாழ்வு வாழ்ந்தார்கள். அறம் என்பது ஒழுக்கம்,கடமை,ஈகை என்ற மூன்றும் இணைந்த உயர்வாழ்வு ஆகும். பிற உயிர்களுக்கு இரங்கி இதம் புரியும் உபகார நிலையில் உயர்வான

புகழும் புண்ணியங்களும் உளவாகின்றன. ஆகவே அந்த உபகாரி இம்மையும் மறுமையும் இன்பம் பெறுகிறான். வையமும் வானமும் அவனை உவந்து வாழ்த்தி வருகின்றன. மன்னுயிர் ஓம்பியவன் பொன்னுயிராய் ஓங்கி உயர்கிறான். [ஜெகவீரபாண்டியர்,பக்.37]1

ஈதல் இசைபட வாழ்தல் அதுவல்லது
ஊதியம் இல்லை உயிர்க்கு. - [குறள்-23]

பிறர்க்கு உதவுவதினால் வரக்கூடிய இன்பத்தை அறியாதவர்கள் தான் பிறருக்கும் உதவாமல் தானும் பயன்பெறாமல் அழிந்து போவர். உலகிலேயே உயர்ந்த இன்பம் பிறர்க்கு உதவுவதால் மனதில் ஏற்படும் நிறைவே ஆகும். தயாள குணம் என்பது பேராசையையும் சுயநலத்தையும் வெல்லக்கூடியது. தயாள குணத்தின் வெளிப்பாடுகள் பெருந்தன்மை, சேவை, பகிர்ந்தளித்தல் ஆகியனவாகும். மனதை முழுமையாக தூய்மை செய்யக் கூடிய சக்தி இதற்கு உண்டு.[பி.எஸ். ஆச்சார்யா,ப.88]2

**ஒப்புறவாளர்களின் உயர்வு**

மழை பெய்து இந்த உலகை செழிக்கச் செய்கிறது. அந்த மழைக்கு இந்த உலகம் பதிலுக்கு என்ன செய்து விட முடியும்? மழை போன்று சான்றோர்கள் கைம்மாறு கருதாமலே உதவி செய்கின்றனர். ஈகை வேறு ஒப்புறவு வேறு ஈகை என்பது தனிப்பட்டவரின் தேவையறிந்து பொருளீதல். ஒப்புறவு என்பது பொதுநல நோக்குடன் செயல்படுதல். எந்த பிரதிபலனும் எதிர்பாராமல் உதவுகின்றவரே ஒப்புறவாளர் ஆவார்.

ஊருணி நீர் நிறைந்தற்றே உலகவாம்
பேரறிவாளன் திரு. - [ குறள்-215]

தன்னில் வந்து சேர்ந்த நீரைக் குளமானது பொதுமக்கள் அனைவரும் பாரபட்சம் இன்றி கொடுக்கின்றது. அதுபோல் உலக மக்களின் நன்மையை பெரிதும் விரும்பும் சான்றோர் பெருமக்கள் தங்களிடம் சேர்ந்த அறிவுச்செல்வத்தை அனைவருக்கும் கொடுப்பர். தானங்களில் இரண்டு வகைகள் இருக்கின்றன. பொருள்களை அளித்தல் [திர்விய தானம்], அறத்தினை அளித்தல் [தரும தானம்].இவ்விரண்டு தானங்களில் தரும தானமே சிறந்தது. [ப.ராமஸ்வாமி, பக்.471]3

சகல தானங்களில் தரும தானமே சிறந்தது. சகல இனிமைகளையும் தரும இனிமை வெல்கிறது.

## இன்றைய மனிதர்களின் நிலை

மனிதவாழ்வின் உண்மையான உயர்ந்த நோக்கம் மற்றும் பயனை ஒவ்வொரு மனிதனும் அறிய வேண்டும். ஆனால் இன்று உலகில் மக்கள் தான், தனஎன்றுகுறுகியசுயநலமனப்பான்மையில் வாழ்வதே நல்லது என நினைந்து அறியாமையில் வாழ்கின்றனர். இறைநிலையை உணராமல் தன்னையும் தான் அடைய வேண்டிய பயனையும் அறியாமல் துன்பத்தில் உழல்கின்றனர். உடலிலே நோய், உள்ளத்திலே களங்கம், மனதிலே குழப்பம், வாழ்க்கையிலே சிக்கல் என்று ஏதோ ஒரு நிலையில் அல்லல் படுகின்றனர். பாரதியார் கூறுவதைப் போல மக்கள் வாழ்வில் தேடிச்சோறு தினம் தின்று பல சிறுகதைகள் பேசி மனம் வாடித் துன்பத்தில் துவண்டு பிறர் வருந்த பல செயல்கள் செய்து நரைக்கூடிக் கிழப்பருவம் அடைந்து இறந்து விடுகின்றனர்.

உன்னுள்ளே அறிவை தெய்வமாக உணர்ந்திட்டால் உலகமக்கள் அனைவரும் உடன்பிறந்தோர் ஆவர் என்கிறார் வேதாத்திரி மகரிஷி.(சு.ஜெயந்தி, 2021)4 ஆகவே தெய்வத்தின் உண்மை இயல்பை உணர்ந்து பிறர்க்கு உதவி வாழும் உயர்ந்த வாழ்வை மனிதகுலம் ஏற்க வேண்டும்.

## இயற்கையின் பயன்பாடுகள்

எது மற்றவர்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறதோ அது தான் அழகு என்பது சாக்ரடீச்ஸின் கருத்து ஆகும். (தமிழ்ப்பிரியன், பக்.44)5. இயற்கை பிறருக்காக துன்பத்தை ஏற்றுக் கொண்டும் தியாகம் புரிந்தும் தன்னை வெளிப்படுத்தி கொள்கிறது. இயற்கை தனக்காக மட்டும் வாழ்வதில்லை என்று ”தாவோ” தத்துவம் கூறுகிறது. [சுப்ரமணியம் சந்திரன், பக்.64]6

1. மரத்தின் பயன் மழைதனை ஈர்த்தல்.
2. மழையின் பயன் பயிர்களை வளர்த்தல்.
3. பயிர்களின் பயன் பசிதனை போக்குதல்.
4. உணவின் பயன் உழைப்பினை பெருக்குதல்.
5. உழைப்பின் பயன் உலகம் வாழ்தல்.
6. மனிதப்பிறவியின் பயன் பிறர்க்குதவி பயனாதல்.

ஒரு பொருள் சிறந்த முறையில் பயனாவது அதை பிறர் நலத்திற்கு பயன்படுத்தும் போது தான். பிறர் நலத்தில் ஈடுபடுபவனே உயர்ந்த மனிதன், சான்றாண்மை மிக்கவன். [சுவாமி ராம்ஸுகதாஸ்ஜீ, பக்.106]7 பிறருக்கு உதவுவதே மனித உடலின் சிறந்த பயன்பாடு .

விஞ்ஞானிகளின் உழைப்பே இன்று மனிதர்களை கைபேசிக்குள் கட்டிப்போட்டு உலகை சுருக்கி வைத்து வசதி வாய்ப்புகளில் வாழவைத்துக் கொண்டிருக்கின்றது.

பெற்றோரின் கொடை உயிர்.

சமுதாயத்தின் கொடை உடல்.

இயற்கையின் கொடை இன்பவாழ்வு.

செய்நன்றியை திரும்ப செலுத்த வாய்ப்பு ஏற்படுத்தி கொள்ளுதல் அவசியம்.

**பிறவிப்பயனை அடைந்த பெருந்தகையாளர்கள்**

பிறவிப் பயன் என்பது உயிர், செல்வம், அறிவு, பேச்சு இவற்றால் இடையறாத இறை நினைவோடு பிறர் நலம் பேணுதலாகும்.[ஹனுமான் பிரசாத் போத்தார், பக்.35]8 நாம் மற்றவர்களுக்கு செய்ய வேண்டிய கடமை பிறர்க்கு உதவுவதும் உலகிற்கு நன்மை செய்வதும் தான். எவ்விதமான சுயநலநோக்கமும் இல்லாமல், பணம், புகழ் மற்றும் வேறு எதிலும் கவனம் செலுத்தாமல் நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவே தொண்டு செய்பவன் தான் சிறப்பாக பணியாற்றுகிறான். இத்தகைய மனநிலையில் ஒருவன் பணியாற்ற வல்லவனாகும் போது அவன் ஒரு புத்த பகவானை போல ஆகி விடுவான் என்கிறார் விவேகானந்தர்.[சுவாமி விவேகானந்தர், பக்.34]9 இந்தியாவின் விடுதலைக்கு தன்னை அர்பணித்தவர் மகாத்மா காந்தி. ஆதரவற்றோருக்கு ஆதாரமாய் விளங்கியவர் அன்னை தெரசா. மாற்றுக்கு ஓர் வேட்டியும் துண்டு மட்டுமே சொத்தாய் கொண்டு மக்களுக்கு உழைத்தவர் பெருந்தலைவர் காமராஜர். தனது காவிஉடையால் இந்தியாவின் ஆன்மீகத்திற்கு கொடியேற்றியவர் சுவாமி விவேகானந்தர். தனது சிறைவாழ்வால் இந்தியர்களின் வாழ்விற்கு உரமிரட்டவர் வ.உ.சிதம்பரனார். சாதியை சிறைபிடித்த காவல்தலைவன் அண்ணல் அம்பேத்கார். உலக அமைதியை நோக்கமாகக்கொண்டு தனிமனித அமைதிக்கு யோகபயிற்சிகளை வழங்கியவர் வேதாத்திரி மகரிஷி. தன் அறிவியல் ஆய்வால் அகிலத்தை தன் வசப்படுத்தியவர் அப்துல் கலாம்.

இந்த நூற்றாண்டில் தனது வாழ்க்கையை தனக்கென வாழாமல் பிறர்கென வாழ்ந்து சாலைகளில் சிலைகளாய் இன்னும் உயிரோடு வாழ்ந்து கொண்டிருக்கும் உன்னத மனிதர்கள் இவர்கள். உதாரணத்திற்கு ஒரு சிலரை காட்டினாலும் உண்மையாய் உழைத்தவர்கள் உலகில் பலர் உண்டு.

ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

**வேதாத்திரி மகரிஷி கூறும் பிறவிப்பயன்**

பிறர் நலத்துக்குதவாத உடல் வலிவும் அறிவும்,
பெற்ற பிறவியும் மதிப்பும் விலங்கினத்த தாகும்;
பிறர் உழைப்பின் விளைவாலும் பிறர் உதவியாலும்,
பிழைக்கின்றோம் என்ற உண்மை மறவாதோன்
மனிதன்
பிறர்க்கு எவ்விதத்தும் வருத்தம் எழா முறையில்
பெருஞ்செல்வம் சேர்த்திடினும் பிழையில்லை;
அதனால்
பிறர் மகிழ, பலமக்கள் வாழ்வில் வளம் ஓங்கப்
பேருதவி புரிந்தவரே, பிறந்த பயன் பெற்றார்.
-வேதாத்திரி மகரிஷி [10]

நாம் நமக்காக, நம் குடும்பத்துக்காக மட்டும் வாழாமல் சமுதாயத்திற்காகவும் தன்னால் இயன்ற சேவைகளை உடலாலோ, பொருளாலோ, மனதாலோ, தன் அறிவின் திறத்தாலோ செய்து கொண்டு வருவதை பழக்கமாக்கி கொள்ள வேண்டும். பிறர்துன்பம் போக்கும் அன்பும் கருணையும் மனித இயல்பாக மலர வேண்டும். முதலில் தன் அளவில் உடல் மன அறிவு சார்ந்த தேவைகளில் தன்னிறைவு அடைந்தாக வேண்டும். அந்த தன்னிறைவை அடித்தளமாக கொண்டு பிறர் தேவைகளை நிறைவு செய்யும் தகைமையை தன்னில் வளர்த்துக் கொள்ள வேண்டும்.

சமுதாயமுன்னேற்றத்திற்கு உதவும் பணி ஒன்றை தனது வாழ்வில் அங்கமாக்கி கொள்ள வேண்டும். ஓய்வு நேரங்களில் பொழுது போக்கு நிகழ்வுகளில் ஈடுபடாமல் பிறர் வாழ்வில் விளக்கேற்றும் தூண்டுதல் பணியை விரும்பி செய்ய வேண்டும்.

- பசியால் வாடுவோருக்கு உணவளித்தல்.
- புயல் வெள்ளம் காலங்களில் துன்பப்படும் மக்களுக்கு உதவுதல்.
- ஏழைக்குழந்தைகளுக்கு கல்வியூட்டல்.
- ஆதரவற்ற பெரியோர்க்கு ஆதரவாய் நேரத்தை செலவிடல்.
- புதிய கண்டுபிடிப்புகளை உருவாக்குதல்.
- இயற்கையை பாதுகாக்க மரங்களை நடுதல்
- பண்பாட்டு சீரழிவை தடுக்க போராடுதல்.
- பெண்மையை போற்றி அவர்கள் வளர்ச்சிக்கு வழி ஏற்படுத்துதல்.
- லஞ்சம் ஊழல்களை எதிர்த்து குரல் கொடுத்தல்.
- யோகப்பயிற்சிகளைக் கொடுத்து தனிமனித அமைதியை ஏற்படுத்துதல்.

Arimaa Nokku Journal
(UGC Care Group-I Journal) ISSN: 2320-4842
Vol-18 No. 04 October–December 2024

ஒவ்வொருவரும் தங்களுக்கு ஆர்வமுள்ள ஒரு துறையை தேர்ந்தெடுத்து அதனைச் சார்ந்து உலக மக்களுக்கு நன்மை விளைய உழைக்க வேண்டும்

**தொண்டின் மேன்மை**

......நீதிநெறி உணர் மாந்தராகி வாழும்
நிலையுணர்ந்து தொண்டாற்றி இன்பம் காண்போம்.
-வேதாத்திரி மகரிஷி

பிறவியின் பயனை உணர்ந்த ஞானாசிரியர்கள் மனிதகுலம் மேன்மை அடைய தொண்டு எனும் அருட்பணிக்கு தம்மை அர்பணித்துக் கொண்டு சாதனை செய்ய உலகில் அமைதி, சமாதானம் நிலை பெற செய்ய முடியும் என்கிறார் வேதாத்திரி மகரிஷி. [ச. ஞானசம்மந்தன், பக்.218]11 பிறர்க்குதவும் செயலை பொருளுக்காகவோ, புகழுக்காகவோ, பதவிக்காகவோ, இல்லாமல் எவ்வித எதிர்பார்ப்பும் இன்றி நிஷ்காமிய கர்மமாக செய்ய வேண்டும். மறுபயன் எதிர்பார்த்து செய்வது சேவைக்கு உகந்ததல்ல. [வேதாத்திரி மகரிஷி, பக்.207] 12. எல்லா இடங்களிலும், எல்லா பொருள்களிலும், எல்லா உயிர்களிலும் இறைநிலை நீக்கமற நிறைந்துள்ளது ஒரு பறவைக்கு நாம் இடும் தானியமும், ஒரு காய்ந்த மரத்திற்கு ஊற்றும் தண்ணீரும், பசியோடு இருப்பவர்க்கு உணவு தருதலும், மனகவலையில் உள்ளவர்க்கு ஆறுதல் தருதலும் ஆகிய அனைத்து உதவும் செயல்களுமே இறைவனுக்கு நாம் செய்யும் சேவையே. நாம் நாமக்காக செய்யும் செயலை இறைவன் தள்ளி நின்று பார்க்கிறான். ஆனால் நாம் பிறரின் நன்மைக்காக செய்யும் சேவையில் அவன் நம்முள் நிறைந்து நம்மை ஆட்கொண்டு இயக்குகிறான். நாம் இறைநிலை நம்முள் இயங்குவதற்கு இடம் தர வேண்டும்.

**முடிவுரை**

ஒவ்வொரு மனிதனும் தனது பிறவியின் நோக்கத்தை உணர்ந்து, மனநிறைவோடு வாழ்ந்து, பிறவிப்பயனை அடைவதற்கான வழிமுறைகளை அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி அவர்கள் மனவளக்கலை எனும் யோகபயிற்சிகள் மூலமாக மனிதகுலத்திற்கு வழங்கி உள்ளார்கள். உலகசமுதாய சேவா சங்கம் என்ற அமைப்பின் மூலம் ஒப்புறவாளர்களாக, வேதாத்திரிய தொண்டர்கள் எளிய முறை குண்டலினி யோக பயிற்சிகளை உலகெங்கும் பரப்பச் செய்து தொண்டாற்றி பிறவிப்பயனை பெற முனைந்துள்ளனர்.

அன்பர்பணி செய்ய என்னை ஆளாக்கி விட்டுவிட்டால்

இன்பநிலை தானே வந்தெய்துமமே பராபரமே.

- தாயுமானவர்.

மனிதன் தன் வாழ்நாளின் இறுதிநாட்களில் இறப்புக்கு முன்னர் தான் வாழ்ந்த வாழ்வை நினைந்து பார்க்கையில் தன் வாழ்வு சகமனிதர்களின் உயர்விற்கு உதவியது என்ற முழுமையான மனநிறைவு ஒவ்வொரு மனிதனுக்கும் வரவேண்டும். ஒரு வாழைமரம் அடி முதல் நுனி வரை சமுதாயத்திற்கு பயனாவது போல ஒவ்வொரு மனிதனும் சமுதாய நலத்திற்கு தன்னை அர்பணித்து வாழும் தகைமை உருவாக வேண்டும்.

ஞானமும் கல்வியும் நயத்தல் அரிது
ஞானமும் கல்வியும் நயந்தகாலையும்
தானமும் தவமும் தான் செய்வாராயின்
வானவர்நாடு வழிதிறந்திடுமே.

-

**ஔவையார்**

தன் ஆற்றலை வளர்த்துக்கொண்டு எப்போதுமே பிறருக்கு உதவி செய்யத் தயாராக இருக்கும் போதுதான் மிகுந்த ல்வமுடையவனைப் போன்றதொரு மனநிலை ஏற்படும்.13 நாடு வாழ நாம் வாழ்ந்தால் நற்கதி உண்டு. பிறர் வாழ்வில் விளக்கேற்றும் சோதியாய் ஒளிர்வதே உண்மையான வாழ்வு. தான் மகிழ்வது மகிழ்ச்சி. பிறரை மகிழ்விப்பது ஆனந்தம். மனித வாழ்வில் முழுமை பெற இறைநிலையின் இயல்பாம் அன்பு, கருணை இவை கொண்டு தொண்டாற்றி இன்பம் காண்போம்.

பிறர்க்குதவி செய்வோம்.
பிறவிப்பயனை நிறைவு செய்வோம்.

**துணை நூற்பட்டியல்**

[1] ஜெகவீரபாண்டியனார், நீதி நூல்கள்-தரும தீபிகை, பரமேஸ்வரி கிராபிக்ஸ், சென்னை, 2012.

[2] பி.எஸ். ஆச்சாரியா,கௌதம புத்தரின் வாழ்வும் வாக்கும், நர்மதா பதிப்பகம், சென்னை, 2009.

[3] ப. ராமஸ்வாமி, புத்தரின் தவமும் தத்துவங்களும், வ.உ.சி.நூலகம், சென்னை, 2006.

(4) சு.ஜெயந்தி, வேதாத்திரி மகரிஷியின் மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்தில் அறிவே தெய்வம் என்பதை பற்றிய ஓர் ஆய்வு, நவீனத் தமிழாய்வு பன்னாட்டுப் பன்முகத்தமிழ் ஆய்வுதழ்] 2021.

(5) தமிழ்ப்ரியன், வளமான வாழ்விற்கு தத்துவச் சிந்தனைகள், கொற்றவை வெளியீடு, சென்னை, 2013.

(6) சுப்பிரமணியம் சந்திரன், உண்மையை தேடி, பாரதி புத்தகாலயம், சென்னை, 2003.

(7) சுவாமி ராம்ஸுகதாஸ்ஜீ, ஆயிரம் அமுததுளிகள், கோவிந்த் பவன் கார்யாலயா, கீதா ப்ரஸ், கோரக்பூர், 2000

(8) ஹனுமான் ப்ரசாத் போத்தார், மஹான்களுடைய சீரிய உபதேசம், கீதா ப்ரஸ், கோரக்பூர், 2012.

(9) விவேகானந்தரின் அறிவுரைகள், ராமகிருஷ்ணமடம், சென்னை, 2009.

(10) வேதாத்திரி மகரிசி, ஞானக்களஞ்சியம் தொகுப்பு -2, வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 1991.

(11) ச. ஞானசம்பந்தன், சித்தர்கள் நெறியில் வேதாத்திரிய யோகம் ஓர் ஒப்பாய்வு, உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை. 2012

(12) வேதாத்திரி மகரிஷி, குணநலபேறும் சமுதாய நலனும், வேதாத்திரி பதிப்பகம், ஈரோடு, 2008

(13) வேதா பேர்ல்ஸ். **www.vethathriri.edu.in**

## REFERENCES

1. Jegaveerapandiyanar, Neethi noolgal-tharuma theebikai, parameswari graphics, chennai, 2012.
2. Aachaariya B.S. Gowthama puththarin vaalvum vaakkum, narmatha pathippagam, Chennai, 2009.
3. Ramaswamy, p. Bhuththarin thavamum thaththuvangalum, V.O.C. Noolagam, Chennai, 2006.
4. Jayanthi, S. "Vethathiri Maharishiyin Makkolamaai vizaintha mathivirunthil arrive theivam enpathai parriya oor aayvu", Modern Tamil Research Journal, 2021.
5. Tamilpriyan, Valamana valvirku thathuva sidhanaigal, Kottravai publications, Chennai, 2013.
6. Subramaiyam Chandran, Unmaiyai Thedi, Bharathi Puthagalam, Chennai, 2003.
7. Swami Ramsugadasji, Aayiram amutha thuligal, Govind Bavan Karyalaya, Geeta press, Gorakpur, 2000.
8. Hanuman Prasath Poththar, Mahangaludaiya Seeriya Upathesam, Geetha press, Gorakpur, 2012.
9. Veveganandharin Arivuraigal, Ramakrishna Madam, Chennai, 2009.
10. Vethathiri Maharishi, Gnanakalanjiyam part 2, Vethathiri Pathippagam, Erode, 1991.
11. Gnanasampandan, Sa. Sidhar neriyil Vethathiriya yogam oor oppaaivu, World Tamil Research centre, Chennai, 2012.
12. Vethathiri Maharishi, Gunanalaperum Samuthaya nalanum, Vethathiri publications, Erode, 2008.
13. Vetha Pearls, www.vethathiri.edu.in